# நம் வாழ்வை தாங்கும் 5 தூண்கள்

P.V Jesudas

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**ஆ**ண்டவராகிய இயேசுவை பின்பற்றி, அவருடைய பிள்ளையாக உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, நம்முடைய உலக வாழ்வுக்காக கடவுள் கவலைப்படுவதுண்டா? என்ற கேள்வி நமக்கு வருவதுண்டு.

பரலோகத்திற்கு போகவேண்டும் என்ற விருப்பத்தோடு நாம் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் இந்த உலக வாழ்வில் பெரும்பாலும் தாழ்வான நிலைமையிலேயே இருக்கிறோம். தரித்திரமான நிலமை, பஞ்சமான நிலமை, பற்றாக்குறை வாழ்வை நடத்திக்கொண்டு போகிறோம். அப்படிப் பட்ட சூழ்நிலையிலே துன்பங்கள் வரும்போது, இடற் பாடுகள் வரும்போது, உண்மையாகவே தேவன் நமக்காக இந்த உலகத்தில் வாழ்வுக்காக கவலைப்படுகிறாரா? என்ற ஒரு கேள்வி எல்லா உள்ளத்திலும் எழும்புகிறது.

இயேசு கிறிஸ்து தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று தேவதூதர்கள் சொன்னபோது, இந்த உலகத்தில் ஒரு பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது. இயேசு கிறிஸ்துவுக்கு இரண்டு பெயர்களை ஆண்டவர் கொடுத்தார்.

**அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். – மத்தேயு 1:21.**

பாவ படுகுழியிலே விழுந்து அதிலிருந்து எப்படி எழுந்து வருவது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த இந்த உலகத்தின் பிள்ளைகளுக்கு, ஒரு விசேஷித்தமான பரலோகத்தின்



செய்தி வந்தது. இந்த உலகத்தில் இரட்சகர் பிறந்திருக்கிறார். இந்த உலகத்தின் மார்க்கங்கள், தத்துவங்கள், ஞானங்கள் தரக்கூடாத பெரிய காரியம் ஒன்று நடந்தது. பாவிகளை இரட்சித்து தேவனுடைய ராஜியத்திற்கு கொண்டுபோகிற அந்த காரியம் நடந்தது. அதற்காக இந்த உலகத்தில் வந்த ஒரே ஒருவரான அந்த நம்முடைய இரட்சகராகிய **இயேசு கிறிஸ்து** வந்தார். அதை குறித்து இந்த உலகத்தின் மக்கள் கொஞ்சம் பேர் மாத்திரம் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தேவன் மனிதர்களுக்காக வந்தார், அவரை ஏற்றுக்கொண்டவர்களோ சிலரே!

இரட்சிப்பை தரக்கூடாத தெய்வங்களை அநேகர் பின் பற்றி கொண்டிருக்கிறார்கள். பாவ படுகுழியிலேயிருந்து மீட்கக்கூடாத அநேகரை மீட்க அந்த மகத்தான தெய்வமாகிய இயேசு கிறிஸ்து வந்தார். நாம் எத்தனை பாவங்களை இதுவரை செய்திருந்தாலும் நமக்காய் இந்த உலகத்தில் வந்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மை மன்னிக்க வாஞ்சையோடு இருக்கிறார்.

**பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி யெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, – சங். 40:2.**

நாம் எத்தனை ஆண்டுகளாக பாவத்திலே விழுந்து கிடந்தாலும் நம்மை இரட்சிக்கக்கூடிய வல்லமை இயேசு கிறிஸ்துவுக்கே உள்ளது. எந்த பாவியும் அவரிடத்தில் வரும் போது அவர் நிச்சயமாக தள்ளமாட்டார் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

**வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், – யூ தா 24.**

நாம் எத்தனையோ பாவங்களை செய்திருந்தாலும், பல முறை விழுந்து விழுந்து எழுந்தாலும் நம்மை திரும்பவும் தூக்கியெடுத்து நம்மை காத்து, மாசற்றவர்களாய் நிறுத்த வல்லமையுள்ளவர் அந்த இறைமகானகிய இயேசு கிறிஸ்து. இப்படி வழிநடத்தி நம்மை தேவனுடைய சநிதானத்தில் ஒரு நாள் நிறுத்தபோகிறார்.

வேதம் அவருக்கு இன்னொரு பெயர் கொடுக்கிறது.

**அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம். – மத்தேயு 1:23.**

அவருடைய இன்னொரு பெயரான இம்மானுவேலுக்கு அர்த்தம் "தேவன் நம்மோடுக் கூட இருக்கிறார்".

### அந்த தேவன் என்ன செய்தார்? அந்த தேவன் யார்?

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். – ஏசாயா 9:6.**

நமக்காக தேவன் ஒரு பாலகனை கொடுத்தார். நமக்கு என்று சொல்லும்போது நம் ஒவ்வொருவருக்கும் என்று அர்த்த மாகிறது. இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு பாவிக்கும் தேவன் ஒரு பாலகனை கொடுத்தார். அவர் பாலகனாய் இந்த உலகத்தில் அவதரித்தார். ஏன் இந்த உலகத்தில் அவர் பாலகனாய் பிறந்தார்? பிதாவாகிய தேவனாலே இந்த உலகத்தின் மக்களாகிய நமக்கு ஒரு பாலகன் கொடுக்கப்பட்டார். அப்படி கொடுக்கப்பட்டதினாலே அவர் ஸ்திரி நிமித்தமாக பாலகனாய் பிறந்தார். அவர் ஏன் இந்த உலகத்தில் பிறக்கவேண்டும்? எதற்காக பிதாவாகிய தேவன் அவரை இந்த உலகத்திற்கு கொடுத்தார் என்றால், நம்முடைய கர்த்தத்துவம் அவர் தோனின்மேல் இருக்கும்.

கர்த்தத்துவம் என்றால்: **அரசாங்கம்** என்று பொருள். ஆங்கிலத்தில் **கவர்மென்ட்** என்று சொல்லுவார்கள். நம்முடைய ஆளுகை அவர் தோளின்மேல் இருக்கிறது. இன்றைக்கு இந்த உலகத்தில் அநேக ஆளுகைகள் இருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆளுகை இருக்கிறது. குடும்பத்தின் எல்லா காரியங்களையும் கவனிக்க ஒரு ஆளுகை இருக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் ஒரு அரசாங்கம் இருக்கவேண்டும். கிராமத்திற்கு பஞ்சாயத்து அரசாங்கம் இருக்கவேண்டும். நகரத்திற்கு முனிசிபல் அரசாங்கம் இருக்கவேண்டும். ஒரு பெரிய நகரத்திற்கு கார்ப்ரேஷன் அரசாங்கம் இருக்கவேண்டும். தாலுக்காவிற்கு தாசில்தார் அரசாங்கம் இருக்கவேண்டும். ஜில்லாவிற்கு கலைக்டர் அரசாங்கம் இருக்கவேண்டும். மாகானத்திற்கு ஒரு அரசாங்கமும் தேசத்திற்கு ஒரு அரசங்கமும் இருக்கவேண்டும். இப்படியாக ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு அரசாங்கம் இருக்கிறது.

அதேபோல நம்முடைய வாழ்க்கையை நாம் நடத்தும் அரசாங்கம் அவர் தோளின்மேல் இருக்கிறது.



நம்முடைய அரசாங்கத்தை சுமக்க அவர் பாலகனாய் பிறந்தார். இன்றைக்கு இந்த உலத்தில், நம்முடைய சொந்த பிரச்சனைகளை தீர்க்கமுடியாமல் நாம் தவித்துக்கொண்டிருக் கிறோம். ஒரு நாடு பிரச்சனைகளை சுமக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. எத்தன முயற்சிகள் எடுத்தாலும், அதை சுமக்க முடியாமலும் தீர்க்கமுடியாமலும் இந்த உலகம் மிகவும் கஷ்டப்படுகிறது. இந்த உலகத்தில் எந்த அரசாங்கத்தையும் மக்கள் தங்கள் ஞானத்தினாலும் அறிவினாலும் அரசாங்கத்தை நிர்வாகிக்க முடியாமல் தினறிக்கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கஷ்டங்கள், வேதனைகள்தான். மனிதனால் தன் சுயமாய் எதையும் செய்யமுடியாது என்று இதை பார்த்த தேவன், அந்த பாரத்தை சுமக்க இந்த உலகத்தில் ஒரு பாலகனை கொடுத்தார்.

**ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. – உபா. 1:31.**

உங்களை என்றால் ஆறு லட்சம் புருஷர்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் பெண்கள், பிள்ளைகள் யாவையும் சேர்த்து எவ்வளவு என்று பெரிய வேத அறிஞர்கள், 20 அல்லது 25 லட்சம் பேர்கள் இருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அத்தனை பேரையும் தேவன் வழிநடத்தினார். கர்த்தத்துவத்தை நம்முடைய தோளின்மேல் வைக்க நாம் பிரயாசப்படவேண்டாம். பெற்றோர்கள் பிள்ளைகளின் காரியங்களை தாங்களே சுமந்து செல்லலாம் என்று நினைக்காதீர்கள். இந்த உலகத்தில் எந்த அரசாங்கம் இருந்தாலும், நாமே சுமந்து செல்லலாம் என்று நினைத்தாலும் பிரச்சனைகளை சந்தித்தே ஆகவேண்டும். நம்முடைய அறிவையும், ஞானத்தையும், சக்தியைக்கொண்டு நம்முடைய அரசாங்கத்தை சுமந்துசெல்ல முடியாது என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே இந்த பாரங்களையெல்லாம் அவர் மீது வைத்துவிடவேண்டும். ஒரு தகப்பன் தன்னுடைய குழந்தையை சுமந்து செல்லுகிறதுபோல சுமந்து செல்லக்கூடியவர் இயேசு கிறிஸ்து.

நம்மை தாங்கும் அந்த தேவனுக்கு ஐந்து நாமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேதத்திலே இருக்கும் நாமங்கள் யாவும் காரணப்பெயர்களாகவே உள்ளன. ஆபிரகாம் என்பதன் அர்த்தம் **விசுவாசத்தின் தகப்பன்**. ஏவாள் என்பதன் அர்த்தம் **எல்லா ஜனத்திற்கும் தாயானவள்**. யாக்கோபு என்பதன் அர்த்தம் **எத்தன்.**

ஆகவே ஆண்டவருக்கு ஐந்து நாமங்கள் உள்ளன.

### –அதிசயமானவர்–

ஆண்டவராகிய இயேசு கிறஸ்துவின் பிறப்பு ஒரு பெரிய அதிசயமாக இருந்தது. அவருடைய வாழ்க்கையே அதிசயமாக இருந்தது. அவருடைய மரணம் அதிசயமாக இருந்தது. அவருடைய உயிர்தெழுதல் அதிசயமாக இருந்தது. இப்படிப் பட்டவரான அதிசயமான ஆண்டவர் நம்முடைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அதிசயமாக இந்த உலகத்தில் வந்தார். எவ்வளவு கஷ்டமான பிரச்சனைகள் இருந்தாலும், அவர் அதை எடுத்து அதிசயமாக தீர்ப்பார்.

நான் கிறிஸ்தவனான வயது பதினாறு. நான் கிறிஸ்தவனாக மாறியபோது என் வீட்டிலே எதிர்ப்பு கிளம்பியது. ஏனென்றால் நாங்கள் பூசாரி குடும்பம். நான் ஒரு நண்பரின் வீட்டிலே தங்கி, அங்கு மூன்று மாதம் அவரோடுக்கூட காட்டிலே வேலை செய்து கொண்டிருந்தேன். திடிரென்று ஒரு நாள் முப்பது ரூபாய் மணியாடர் வந்தது. ராசன் என்று சொல்லப்பட்ட ஒரு மிஷினரி எனக்கு கடிதம் எழுதினார். அதில்: உன்னை பற்றி கேள்விப்பட்டேன், பூனாவிலே எங்களுக்கு ஒரு பெரிய கல்லூரி இருக்கிறது, நான் அனுப்பும் முப்பது ரூபாயை வைத்துக்கொண்டு பூனாவிற்கு வந்துவிடு, நான் உன்னை கவனித்துக்கொள்கிறேன் என்று எழுதியிருந்தார். நான் அந்த முப்பது ரூபாயை வைத்துக்கொண்டு கோயமுத்தூர் ரயில் நிலையத்திற்கு போனேன். 29 ரூபாய் 50 பைசாவை கொடுத்து பயண சீட்டை வாங்கினேன்.

என் பெட்டியிலே நான் வைத்திருந்தது ஒரு சட்டை ஒரு பேன்ட் கால் செருப்புதான் இருந்தது. அதோடுதான் என் வீட்டை விட்டு வெளியே வந்தேன். பிறகு ரயிலில் ஜன்னல் பக்கமாக உட்கார்ந்தேன். அந்த ரயில் புறப்படும் நேரத்திலே எங்கேயோ அந்த பிளாட்பாரத்திலே அடிதடி சண்டைபோல கூச்சல் கேட்டது. நான் எட்டி பார்த்தபோது, எல்லாரும் சேர்ந்து ஒருவரை அடிக்க போய்கொண்டிருந்தார்கள். அந்த நபர் நன்றாக உடுத்தியிருந்தார். அவரை பார்ப்பதற்கு ஒரு மனிதனைபோல தெரியவில்லை. ஏதோ ஒரு விசித்திரமாக தெரிந்தது. அவர் கையிலே ஒரு பெட்டி இருந்தது. அவர் யாரையோ தேடிக்கொண்டிருந்திக்கிறார், அவரை காணமுடியவில்லை. ரயில் புறப்படபோகிறதே என்ற அவசரத்திலே



வேகமாக வந்தபோது ஒரு கற்பஸ்திரியை இடித்துவிட்டார். அந்த பெண் கீழே விழுந்துவிட்டாள். அந்த நபர் மற்றவர்களிடம்: ஐயா! நான் தெரியாமல் இடித்துவிட்டேன். ஒருவரை தேடிக்கொண்டே கவனக்குறைவால் இடித்துவிட்டேன் என்று சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தார், அதனால்தான் அங்கு பெரிய சத்தம் தோன்றிற்று.

அப்படி மன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தவர் திடிரென்று என்னை பார்த்து வேகமாக என்னிடத்தில் ஓடிவந்தார். அவர் என்னிடம்: உங்கள் பெயர் இளங்கோவன்தானே? என்று கேட்டார். நான் கிறிஸ்தவனாகும் முன்பாக எனக்கு பெயர் **இளங்கோவன்.** கிறிஸ்தவனாக மாறியபோது **ஏசுதாஸ்.** நான் கிறிஸ்மஸ் அன்றைக்கு பிறந்தேன். அதனால் எனக்கு **ஏசுதாஸ்** என்று பெயர் வைத்தார்கள்.

பிறகு அந்த நபர் என்னிடம்: நீங்கள்தான் பூனா கல்லூரிக்கு போகிறீர்களா? நான் ஆமாம் என்றேன். உங்களை தேடிதானே நான் வந்தேன் என்று சொன்னார். ரயில் புறப்பட்டுவிட்டது, அந்த ரயிலோடு ஓடி வந்தார். அதற்கு நான்: நீங்கள் யாரென்று எனக்கு தெரியவில்லையே என்றேன். அதற்கு அவர்: என்னை உங்களுக்கு யாரென்று தெரியாது, ஆனால் உங்களை எனக்கு நன்றாக தெரியும் என்று சொல்லி, கல்லூரியிலே நன்றாக படியுங்கள், உங்களுக்காக நான் ஜெபிக்கபோகிறேன், கர்த்தர் உங்களோடுகூட இருப்பார், என்று சொல்லி ரயில் வேகமாக கிளம்பிவிட்டது, அவரால் ஓட முடியவில்லை, அவர் வைத்திருந்த பெட்டியை எடுத்து திடிரென்று ஜன்னல் வழியாக என்னுடைய மடியிலே போட்டுவிட்டார். நான் ஜன்னல் வழியாக பார்த்தபோது அவர் அந்த பிளாட்பாரத்திலிருந்து கையை அசைத்துக்கொண்டிருந்தார்.

ரயில் பெங்களூருக்கு வந்தது. நான் காலையில் ஒன்றும் சாப்பிடாததால், பசிக்க ஆரம்பித்துவிட்டது. பெங்களூரிலே ஒரு வாலிபனும், வாலிபப்பெண்ணும் என் முன்பாக உட்கார்ந்தார்கள். அவர்களும் அந்த கல்லூரிக்குதான் செல்கிறார்கள் என்று எனக்கு தெரிந்தது. நான் வெளியில் சென்று அந்த மீதமுள்ள 50 பைசாவுக்கு பண் வாங்கி சாப்பிட்டேன். நான் பண் மட்டும் வாங்கி சாப்பிட்டதை பார்த்த அந்த பெண், நீங்கள் சரியாக சாப்பிடவில்லை என்று சொல்லி, அவள் வைத்திருந்த சாப்பாடு பொட்டளத்தை எனக்கு கொடுத்தாள். பிறகு அவள் என்னிடம்: என் தம்பி என்னோடு வந்தான், அவனுக்கும் சேர்த்து

எடுத்து வந்த சாப்பாடைதான் உங்களுக்கு கொடுத்தேன். அவன் ஒரு முக்கியமான தாளை மறந்துவிட்டதால், அதை எடுத்துக் கொண்டு, அடுத்த ரயிலில் வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனான். ஒரு சமயம் கர்த்தர் உங்களுக்காக இந்த சாப்பாடை வைத்திருந்தாரோ தெரியவில்லை என்று சொல்லி சாப்பாடை எனக்கு பறிமாறினாள். பிறகு கல்லூரிக்கு போகும் வரையிலும் எல்லா காரியத்தையும் எனக்காக செய்தாள்.

நான் கல்லூரிக்கு சென்று என் துணிகளை பார்க்கும் போது அழுக்காக இருந்தது. அதை துவைக்கலாம் என்று நான் துணிகளை கழற்றம்போது, அந்த பெட்டியிலே என்ன இருக்கிறது என்ற ஒரு கேள்வி எனக்கு தோன்றி, திறந்து பார்த்தேன். அழகான வேத புத்தகம் மேலே வைக்கப்பட்டிருந்தது. அதன் கீழே நான்கு பேண்ட், நான்கு சட்டைகள் இருந்தது. அவைகளை எடுத்து நான் அணிந்து பார்த்தபோது எனக்கென்றே தைத்ததுபோல இருந்தது.

இன்றைக்கும் நான் கேட்கும் கேள்வி, என்னுடைய அளவுசட்டை அந்த நபருக்கு எப்படி தெரிந்தது? என்னுடைய அளவை தெரிந்து தைத்தாரா? அந்த நபருக்கு தெரிந்ததோ இல்லையோ, என்னை காண்கின்ற தேவனுக்கு என் சட்டை அளவு என்ன? பேண்ட அளவு என்ன? என்று தெரியும். அன்று ஆதாம் ஏவாள் பாவம் செய்தபிறகு இளைகளினால் உடுப்புகளாய் தைத்து போட்டுகொண்ட அந்த உடுப்புகளை ஆண்டவர் அகற்றி, தோல் உடுப்புகளை செய்துகொடுத்தார். அவர் மிகுந்த இறக்க முள்ளவர், அவருக்காய் காத்திருக்கிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுப்படாது. **அவர் அதிசயமான கர்த்தர்**, நம்முடைய தேவைகளிலும் குறைகளிலும் அவர் அதிசயமாக நடத்துகிறார். நாம் அவரை பின்பற்றி பார்த்தால்தான் அவரின் அதிசயத்தை நாம் அறிந்துக்கொள்ளமுடியும்.

நம்முடைய பிரச்சனைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவர் தீர்த்துவைப்பார். பணமில்லாத, வேலையில்லாத, திருமண மாகாத, பிரச்சனைகள் எத்தனை பேருக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு நாம் கவலைப்பட்டு கண்ணீர் விட்டு, மெலிந்துபோய் தாங்கமுடியாத சுமைகளை தாங்கிக் கொண்டிருக்கிறோம். அப்படி தாங்க வேண்டிய அவசியமில்லை. நமக்காக ஒரு பாலகன் பிறந்தார். நமக்காக ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கிறது. அவர் நாமம் அதிசயமானவர். அதிசயமாக நம்முடைய



காரியங்களை ஆண்டவர் தீர்த்துவைப்பார்.

இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் எப்படி தாங்கினார் என்று **யாத்திரையாகமம்** என்ற புத்தகத்தில் வாசித்து பாருங்கள். அந்த பல ஆண்டுகளின் பிரயாணத்திற்கு அவர்களிடம் பணம் இருந்ததா? உணவு இருந்ததா? துணிமனிகள் இருந்ததா? அவர்கள் எடுத்து வந்த ஆகாரம் யாவும் சீக்கிரமாகவே தீர்ந்துவிட்டது. அத்தனை ஆண்டுகளாக அவர்களை போஷித்தது யார்? அவர்களை பகலில் வெயில் உஷ்ணம்படாமல் மேக ஸ்தம்பத்தினால் பாதுகாத்தது யார்? இரவிலே குளிரிலும், வனாந்திரத்திலே காரிருளிலும் அக்கினி ஸ்தம்பத்தை மேலே வைத்தவர் யார்? அந்த அதிசயமான கர்த்தரல்லவா?

அவர்கள் அன்று தேவதூதர்களின் அப்பத்தை சாப்பிட் டார்கள். 25 லட்சம் ஜனங்களை 40 வருஷங்காலமாய் ஆண்டவர் போஷித்தார். அந்த ஆகாரத்தை புசித்தவர்கள் 40 வருஷமாய் எந்தவிதமான நோய்களாலும் தாக்கப்படாமல் இருந்தார்கள். எந்த விதமான பலவீனமில்லை என்று திருமறை சொல்லுகிறது. அப்படிப்பட்ட ஆகாரத்தை ஆண்டவர் கொடுத்தார். அவர்கள் கறியில்லை என்று சொன்னபோது, அவர் காடைகளை அனுப்பி அவர்கள் பக்கமாய் லட்சகணக்காய் வந்து விழபண்ணினார்.

ஆப்பிரிக்காவிலே சில வருஷத்திற்கு முன்பாக ஒரு உண்மை சம்பவம் நடந்தது. அந்த நாட்டிலே பெரும் பஞ்சம் ஒரு இடத்திலே ஏற்பட்டது. அந்த பஞ்சத்திலே தேவனுடைய பிள்ளைகள் சிக்கி தவித்தார்கள். அந்த பஞ்சம் மிக கொடியதாக இருந்ததினாலே, ஆகாரம் இல்லாமல் போயிற்று. அந்த தேவனுடைய பிள்ளைகள் தேவாலயத்தில் கூடி, ஆண்டவரை துதித்து பாடி வேண்டினார்கள். தகப்பனே! அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கு வானத்தை திறந்த தபப்பனே! இன்றைக்கும் அந்த வானத்தை திறந்து, அந்த மன்னாவை கொடும் ஆண்டவரே என்று கேட்டார்கள். தேவன் அதே மன்னாவை அவர்களுக்கும் கொடுத்தார். இதை சாட்சியாக எல்லா இடத்திலும் எழுதினார்கள்.

**நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன். – மீகா 7:15.**

ஆண்டவர் நமக்கு வரும் இக்கட்டுக்காலத்தில் நிச்சயமாக அன்றுபோல இன்றும் செய்வார். அவரிடம் முழங்காற்படியிட்டு கேட்டு அவர் செய்வாரா இல்லையா என்று பாருங்கள்! ஏனென்றால் அவர் நமக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார்.

**கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்; உங்கள்மேல் இருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை. – உபாகமம் 29:5.**

இன்று 40 வருஷம் உழைக்கும் செருப்பு எங்கேயாவது இருக்கிறதா? அல்லது நாற்பது வருஷம் சட்டை துணிகள் கிழியாமல் வாங்கினபடி இருக்கிறதா? அனால் இவர்கள் அணிந்த செருப்புகளும் துணிகளும் 40 வருஷங்கள் அப்படியே இருந்தது. எவ்வளவு அதிசயம்!

**இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு அவர்களைப் பராமரித்துவந்தீர்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப்போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை. –நெகேமியா 9: 21.**

அந்த இஸ்ரவேலர்கள் கூடவே கர்த்தர் இருந்தார் என்று வேதத்திலே பார்க்கிறோம். அதேப்போல நம்மை அவர் ஆச்சரியமாக வழிநடத்துவார்.

**பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக்கு குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். – லூக்கா 22:35.**

சீஷர்கள் எத்தனை மகத்தான சாட்சி பகர்ந்தார்கள். வேதத்திலே தேவனோடு இருந்தவர்கள் யாவருக்கும் ஒரு நன்மையும் குறைவுப்பட்டதில்லை. அவர் அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் நடத்துகிறார்.

**யோசுவா ஜனங்களை நோக்கி: உஙகளைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான். –யோசுவா 3: 5.**

தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்தமாக இருக்கவேண்டும். அவருடைய கட்டளைகளை கைக்கொண்டால் நாம் பரிசுத்தமடை வோம். அப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டவர் விசேஷமான அற்புதங்களை அவர் செய்கிறார். அவருடைய அற்புதங்கள் ஆச்சரியமானவைகளாக இருக்கிறது. நம்முடைய பாரங்களை சுமக்கிற தேவன் அதிசயமான கர்த்தர். அவரின் வழிகளில் நடப்பவர்களுக்கு அவர் அதிசயமாக அவர்களை நடத்துகிறார். நம் வாழ்க்கையில் ஒரு குறைவும் இல்லாமல் நம்மை அதிசயமாக நடத்த வல்லமையுள்ள தேவனவர். அவர் இல்லாமல் நமக்கு நன்மைகள் இல்லை.





இந்த உலகத்தின் மக்களுக்கு ஆலோசனைகள் அதிகமாக தேவப்படுகிறது. பிள்ளைகள் பள்ளியில் படிக்கும்போது, அதிக ஆலோசனைகள் தேவைப்படுகிறது. மனிதர்கள் வேலை செய்யும் ஆலோசனைகள் தேவைப்படுகிறது. ஒரு டாக்டருக்கு அதிக ஆலோசனைகள் தேவைப்படுகிறது. நம் பிள்ளைகளுக்கு திருமணம் செய்யவேண்டுமென்றால் ஆலோசனைகள் தேவைப்படுகிறது. இப்படி நம் வாழ்க்கையிலே ஒவ்வொரு காரியத்திலும் ஆலோசனைகள் ஏராளமாக தேவைப்படுகிறது. அந்த ஆலோசனை களுக்கு நாம் பெரியவர்களிடத்திலே போய் கேட்டு அறிந்துக் கொள்கிறோம். ஆனால் இஸ்ரவேலர்கள் ஆலோசனைகளை கேட்க யாரிடத்திலே போனார்கள்?

**என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்கு மென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள். – ஓசியா 4:12.**

நமக்காக இருக்கிற ஆண்டவர் ஆலோசனை கர்த்தாவாக இருக்கிறார். அவர் ஆலோசனைக்கு ஊற்றும் இருப்பிடமுமானவர். இந்த அண்டசராசரத்தின் ஆலோசனைகள் யாவும் அவரிடத்திலே இருந்து வந்ததாகும். படைப்புகள் யாவும் அவரிடத்திலிருந்து வந்த ஆலோசனையினால் வந்தது. மலைகளை போல நிறந்தரமாக, வானத்தின் நட்சத்திரங்களைப்போல பிரகாசிக்கிறவர்களாக நாம் வாழவேண்டுமென்றால், இறைவனிடத்தில் இருக்கிற ஏராளமான ஆலோசனைகளை கேட்டு வாழவேண்டும். வேதம் முழுவதும் மிகுந்த ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல பிரச்சனை களுக்கு வேதபுத்தகம் ஆலோசனைகள் கொடுக்கிறது. அவருடைய ஆலோசனைகள் என்றைக்கும் நிற்கும்.

**கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். –சங்கீதம் 33:11.**

**யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்; அவனவனுக்கு அவனவனுடைய கிரியையின் பலனுக்குத் தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கின்றன. – எரே. 32:19.**

பலவிதமான பிரச்சனைகளை வைத்துக்கொண்டு நாம் திண்டாடிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமல்லை.

ஏனென்றால் அவர் நமக்கு ஆலோசனை கர்த்தாவாக இருக்கிறார். அவர் ஆலோசனைகள் என்றைக்கும் நிற்கக்கூடியவைகள். அவர் யோசனைகள் நம்மை புத்தியுள்ளவர்களாக மாற்றும்.

**இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர். – ஏசாயா 28:29.**

பேதுரு இராமுழுவதும் மீன் பிடித்து ஒன்றுமில்லாமல் களைத்துபோனார். காலையிலே இயேசு அவனை பார்த்து வலையை அந்த பக்கமாக போடு என்று சொன்னபோது, வலை கிழியத்தக்கதாக மீன்கள் அகப்பட்டது. அவருடைய ஆலோசனைகள் மிகுந்த நன்மைகளை கொடுக்கத்தக்கதாக இருக்கிறது.

மனிதர்களுக்கு சிலசமயத்திலே தேவனுடைய ஆலோசனை ஒன்றுமில்லாமல் தெரியலாம். பரிசுத்த ஓய்வுநாளை பரிசுத்தமாக கைக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, நமக்கு பெரும் பாடாக இருக்கிறது. அதற்கு பல வசனங்களை காட்டி ஓய்வுநாள் முடிந்துவிட்டது என்று நாமே சொல்லிக்கொள்ளுகிறோம். அந்த கட்டளை ஆண்டவருடைய கட்டளை. அதை செய்து பார்க்கவேண்டும். அவர் நமக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை அளவில்லாமல் தருவார்.

ஒரு வாலிபன் இயேசுவிடத்தில் வந்து நித்திய ராஜியத்தை சுதந்தரிக்க என்ன செய்யவேண்டும்?

**அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே நித்திய ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவரைத்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப்பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.**

**– மத்தேயு 19:16–22.**



ஒரு சரித்திர ஆசிரியன் அந்த வாலிபனை பற்றி எழுதினார். அந்த வாலிபன் பிறகு பெரிய பணக்காரனான். அந்த எருசலேம் பட்டணத்திலே அவனைப்போல பெரிய பணக்காரன் இல்லை. அவன் வயது 45 ஆனபோது, திடிரென்று அந்த எருசலேம் ரோமசேனைகளால் முற்றுகையிடப்பட்டது. அந்த ரோம சேனைகள் அந்த பட்டணத்தை இடித்து ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்கு இடித்து போட்டார்கள். அந்த வாலிபனுடைய சொத்து அனைத்தும் நெருப்பினால் சாம்பலானது. அதிலே அவனம் மரித்து போனான் என்று எழுதியிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசுவுக்கு இந்த அழிவை தெரிந்துதான் சொன்னார். உன் சொத்துக்களை விற்று என்னை பின்பற்றிவா என்று சொன்னார். அவருடைய ஆலோசனைகளை அவன் கேட்க மறுத்தான். எல்லாவற்றையும் இழந்து தன்னையும் இழந்து போனான். அவருடைய ஆலோசனைகள் ஏராளமாக நமக்கு வேதத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனைகளின்படி நடக்கும்போது வானத்தின் பல கனிகளை திறந்து ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார். சம்பளம் போய்விடும், வீடு போய்விடும் என்று நினைத்து ஓய்வுநாளை கைக்கொள்ளாமல் இருக்க நினைக்கவேண்டாம், அவருடைய கட்டளையை மீறவேண்டாம். அவர் நமக்கு தரும் ஆசீர்வாதங்களை இழந்துபோகவேண்டாம்.

**தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள், அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும் இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள். – சங்கீதம் 107:10,11.**

**ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்; அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல், வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்தரவெளியிலே தேவனைப் பரீட்சைபார்த்தார்கள். – சங்கீதம் 106:13,14.**

**உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். – சங்கீதம் 73:24.**

நமக்கு தேவைப்படும் ஆலோசனைகளுக்கு தேவனிடத்தில் செல்லவேண்டும். மோசே கர்த்தருடைய ஆலோசனைகளை எல்லாம் கேட்டான், அவர் மீது மிகுந்த விசுவாசம் வைத்திருந்தான். அவனை கோலை நீட்ட சொல்லும்போதெல்லாம் சந்தேகப்படாமல் நீட்டி கர்த்தரால் அற்புதம் செய்தான். அவரது ஆலோசனைகள் மிகுந்த நன்மைகளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

## –வல்லமையுள்ள தேவன்–

இஸ்ரவேலர்கள் கடல் வழியாக தப்பிசெல்ல வழியில்லாமல் போனவேலையிலே மோசே மூலமாக கர்த்தர் பெரிய அற்புதத்தை செய்தார். இந்த உலக சரித்திரத்திலேயே அந்த அற்புதம்தான் முதலும் கடைசியுமாக நடந்தது. அதற்கு பிறகு எந்த கடலும் இரண்டாக பிளந்து மதிற்சுவரைப்போல நின்றதில்லை.

நான் முதல் முதலாக வெளிநாட்டிற்கு போக இருந்தேன். அப்பொழுது எனக்கு பாஸ்போர்ட் எடுக்க வேண்டியதிருந்தது. அதை எடுக்கவேண்டுமென்றால் ஒரு மாதத்திற்கு முன்பாக அப்ளிகேஷன் எழுதிக்கொடுக்கவேண்டும் என்பதெல்லாம் எனக்கு தெரியாது. நான் சென்னைக்கு சென்று பாஸ்போர்ட் அலுவலகத் துக்கு வந்தேன். அங்கு வந்துபார்த்தபோது பாஸ்போர்ட் எடுக்க ஒரு மாதத்திற்கு முன்பே அப்ளிகேஷன் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று எழுதியிருந்தது. நான் விசாரித்து பார்த்தபோது, அவர்கள் என்னிடம்: அதெல்லாம் முடியாது! என்று சொல்லிவிட்டார்கள்.

உபவாசமிருந்து ஜெபம் செய்தேன். எனக்கு ஒரு நண்பர் போலிஸ் டிபார்ட்மென்ட்டிலே இருந்தார். அவரை பார்க்க சென்றேன். அவர் சொன்னார்: என்னுடைய மாமாதான் அங்கு ஒரு பெரிய அதிகாரி, அவரை போய் பாருங்கள், நான் அவருக்கு போன் செய்கிறேன் என்று சொன்னார். நான் உடனே அவரை போய் பார்த்தபோது, அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தார். எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுத்தார். மதியம் நான்கு மணிக்கு பாஸ்போர்ட் தயாராகிவிட்டது. ஆண்டவர் அதிசயமாக என்னை நடத்தினார்.

சிலோன் அலுவலகத்துக்கு போனேன் விசா வாங்குவதற்கு. அங்கே ஒருவர் என்னை கடுமையாக திட்டினார். என்ன விசா எடுக்க உடனே கிடைத்துவிடுமா? இது உனக்கு தெரியாதா? என்றெல்லாம் திட்டினார். ஒன்றும் செய்யமுடியாமல் வெளியே வந்து அங்கேயே ஒரு ஜெபம் செய்தேன். அங்கேயிருந்த ஒரு வாலிப பெண் ஒருவள் என்னை நோக்கி: ஐயா! நீங்கள் கிறிஸ்தவர்களா? நீங்கள் ஜெபம் செய்வதை பார்த்தேன். நானும் ஒரு கிறிஸ்தவப்பெண்தான் என்று சொல்லி, உங்களுக்கு என்ன வேண்டும்? என்றாள். நான் எனக்கு விசா எடுக்க வந்தேன் என்று



சொன்னேன். அந்த பெண் என்னிடம்: இந்த ஆபிஸரிடத்தில் நீங்கள் வாங்கமுடியாது, ஒரு மாதம் காத்திருக்கவேண்டும். மதியம் மூன்று மணிக்கு இவரைவிட ஒரு பெரிய ஆபிஸர் வருவார், அவரை போய் பாருங்கள் என்று சொல்லி நீங்கள் விடாமல் ஜெபம் பண்ணுங்கள் ஆண்டவர் நிச்சயமாக உங்களுக்கு விசா தருவார் என்று சொன்னாள். அந்த பெரிய ஆபிஸர் வந்து அவரும் என்னை திட்டினார். ஆனால் ஜெபம் செய்து கொண்டிருந்தேன், அதை அவர் பார்த்தார். நான் ஜெபம் செய்வதை பார்த்துகொண்டேயிருந்தவர் அந்த விசாவிலே கையெழுத்தை போட்டுவிட்டார். தேவனால் எல்லாம் கூடும். என்னுடைய வாழ்க்கையிலே தேவன் நிறைய காரியங்களை செய்திருக்கிறார்.

ஆண்டவர் வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு. அவர் என்றைக்கும் பிதாவாகதான் இருக்கிறார். அவரை விட்டு நாம் தூரமாக போனாலும் அவர் நமக்கு தகப்பனாகதான் இருப்பார். அவரிடத்திலே சமாதானம் உண்டு. நம் குடும்பத்திலே சமாதானம் இல்லை, எங்கும் சமாதானம் இல்லை. ஆனால் ஆண்டவரிடத்திலே சமாதானம் உண்டு. பிசாசானவன் தனக்கு கொஞ்ச காலம் மாத்திரம்தான் உண்டு என்று மிகுந்த கோபத்தோடு தேவனுடைய பிள்ளைகளை ஆபத்திற்குள்ளாக்கு கிறான். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், அவர் மீது சாய்ந்து கொண்டு, பத்திரமாய் அவரை பிடித்துகொண்டு, எப்பக்கத்திலும் சாய்ந்து போகாமல் உண்மையும் உத்தமுமான சத்தியத்திலே நடப்போமாக ஆமென்!

